352.0073
VAR AR

# வடக்கு, கிழக்கு மாகாண அரசுக்கு அதிகாரப் பரவலாக்கல் செய்வதில் இலங்கை அரசு காட்டும் தயக்கம்

A/c Cat
Ar.7

முதலமைச்சர்

அ. வரதராஜப்பெருமாள்

ARCHIVES

352.0073
VAR

வெளியீடு:
தகவல் திணைக்களம்,
வடக்கு, கிழக்கு மாகாண அரசு,
திருகோணமலை.

## (27 - 04 - 89ல் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சர்

# திரு. அ. வரதராஜப்பெருமாள்

## அவர்கள் 'அதிகாரப் பரவலாக்கல்' தொடர்பாக ஆற்றிய உரை)

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கத்தின் அமைப்பு வேலைகளையும், அதற்குரிய அதிகாரங்களையும் வென்றெடுக்கின்ற வேலைத்திட்டங்களை பல்வேறு வடிவங்களில் நாம் மேற்கொண்டு வருகின்ற இன்றைய கால கட்டத்தில் ''அதிகாரப் பரவலாக்கல்'' என்ற விடயம் தொடர்பாக அடிக்கடி பேசவேண்டிய, விவாதிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைகளுக்குள்ளாகியிருக்கின்றோம். ''ஈழம் கோரிக்கையை முன் வைத்துப் போராடிய நாம் இன்று இந்த மாகாண சபையை ஏற்றுக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக இங்கு நோக்குதல் பொருத்தமானது.

1983ம் ஆண்டு யூலை இனப் படுகொலைகளைத் தொடர்ந்து பரந்தளவில் ஈழ விடுதலை இலட்சியத்துடன் ஆயுதப் போராட்டம் உக்கிரமடைந்த வேளையில் ஸ்ரீலங்கா அரசு குறிப்பாக இன்று ஆட்சி பீடத்திலிருக்கும் இதே கட்சிக்காரர்கள் அன்று பேச்சுவார்த்தை மூலமான சமாதானத் தீர்விற்கு முன் வந்தார்கள். இதனுல் 1985ம் ஆண்டு பூட்டான் தலைநகரான திம்புவில் தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுடன் ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடாத்தினுர்கள். அப்போது ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகள் அன்றைய ஜனுதிபதி நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் ''1978ம் **ஆண்டில் அரசியல் யாப்பில் இருக்கும் சர்வசன வாக்கெடுப்பிற்குரிய விடயங்களைத் தவிர்த்து ஏனைய விடயங்களிலெல்லாம் மிக உயர்ந்த பட்சமான அதிகாரப் பரவலாக்கலை செய்யத் தயாராக உள்ளதாக''** குறிப்பிட்டனர்.

குறிப்பாக ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை வகித்த சட்டத்துறை கலாநிதி. திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தனு **''ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் இந்திய அரசியலமைப்பில் எந்தளவுக்கு (மருவிய சமஸ்டி அமைப்பு) அதிகாரப்பரவலாக்கல் உள்ளதோ அந்தளவிற்கு இங்கும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் மிக உயர்ந்த பட்சமான அதிகாரப்பரவலாக்கலை செய்ய ஸ்ரீலங்கா அரசு தயாராக இருப்பதாக''** குறிப்பிட்டார்.

இலங்கையின் 1978ம் ஆண்டின் அரசியல் அமைப்பில் 1ம் 2ம், 3ம், 6ம், 7ம், 8ம், 9ம், 10ம், 11ம் மற்றும் 30(2)வது, 62(2)வது உறுப்புரைகளை மாற்றுவதற்கு சர்வசன வாக்கெடுப்பு தேவை. ஏனைய அனைத்து உறுப்புரைகளும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் மூலம் மாற்றக் கூடியவை. இவற்றில் மாற்றியமைக்க வேண்டியவைகளை மாற்றி புதிய அமைப்பு முறையினை உருவாக்கத் தயாராகவிருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கமானது தனது தரப்பில் ஒரு உத்தரவாதத்தை எங்களுக்கு அளித்தது. அதாவது ''இலங்கை ஒரு சிறிய நாடு. அங்கிருக்கக்கூடிய அனைத்து மக்களும் ஐக்கியமாக வாழ முடியும். அவ்வாறு ஒருமித்து வாழக்கூடிய வகையில் தமிழ் பேசும் மக்களுடைய பாதுகாப்பு, மற்றும் ஏனைய உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் இந்திய மாநில அரசுகள் எந்தளவுக்கு அதிகாரங்களைக் கொண்டுள்ளனவோ அவ்வாறே தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு மாநில அரசினைப் பெற்றுத் தருவதாகவும், அதனை ஏற்றுக் கொள்ளும்படியும்'' வற்புறுத்தினார்கள்.

அப்போது நாம் ''இந்திய மாநில அரசை நிகர்த்ததான மாகாண அமைப்பு எமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாது அதற்கும் மேலாக ஸ்ரீலங்கா அரசு எமக்கு உரிமைகளைத் தர வேண்டுமென்பதில் உறுதியாக நின்றோம். அந்த அடிப்படையில் திம்பு பேச்சு வார்த்தைகளின் போது நான்கு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்தது நீங்கள் அறிந்ததே.

**எனினும் ஈழப்போராட்டத்தில் அராஜக கும்பலினால் ஏற்படுத்தப்பட்ட தேக்க நிலை, திசை திருப்பங்கள் காரணமாக எமது பிரதேசத்தில் அமைதி, சமாதானம், ஜனநாயகம் என்பவற்றை ஏற்படுத்தவும், அழிந்து போன தேசத்தைப் புனரமைக்கவும் இடைக்காலத் தீர்வாக மாகாண அரசாங்கம்' என்ற நிலைக்கு தள்ளப்பட்டோம்.** இதனால் திம்புவில் வைக்கப்பட்ட நான்கு கோரிக்கைகளுக்குப் புறம்பான தீர்வினை ஏற்றுக் கொண்டோம்.

ஆனால் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை அரசாங்கமும் சரி, இந்திய அரசாங்கமும் சரி பேச்சுவார்த்தைக்கான உரைகல்லாக இந்தியா அரசியலமைப்பையே அடிப்படையாக எடுத்துக் கொண்டன.

இந்திய அரசியலமைப்பில் எவ்வாறான அதிகாரப்பரவலாக்கல் உள்ளனவோ அந்த அடிப்படையில் இங்கு மேற் கொள்வதென்ற ரீதியில் மாகாணசபை உருவாக்கம் இடம்பெற்றது. எனவே எனது உரையில்

இந்திய அரசியலமைப்பினை துணைக்கிழுப்பதன் மூலம் அதிகாரப் பரவலாக்கலில் இலங்கை அரசு எந்தளவிற்கு இழுத்தடிப்புக்களைச் செய்து வருகிறது என்பதைத் தெளிவு படுத்த முடியும். மேலும் இவ்வாறு இந்திய அரசியலமைப்பினை துணைக்கிழுப்பதன் மூலம் இலங்கை அரசின் வாக்குறுதிக்கும், இந்திய அரசின் வாக்குறுதிக்கும் எந்தளவிற்கு நிறைவேறியுள்ளன, நிறைவேறுவதற்குரிய சூழ்நிலைகள் உள்ளன என்பதிலும் நாம் தெளிந்து கொள்ளலாம்.

இதே வேளை அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான முழு உண்மைகளையும் முழுமையாகத் தொகுத்து வெளிக் கொண்டு வருவதற்கும், மாகாண பேரவையானது இது தொடர்பான தீர்மானகரமான முடிவுகளை மேற்கொள்வதற்குமான ஒரு காலக்கனிவு ஏற்பட்டுள்ளது என்று நான் கருதுகின்றேன். இந்தச் சபை இன்றைய காலகட்டத்தில் இதைத் தீர்மானமாக முடிவு செய்ய வேண்டுமென்று நான் கருதுகின்றேன்.

மாகாணசபைத் தேர்தலுக்கு முன் நான் சார்ந்த கட்சி மூன்று கட்டங்கள் பற்றிய முடிவுகளை எடுத்தது. **மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைந்த வகையிலான கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடியதாக மாகாண அளவிலான அரச நிர்வாகத்தை உருவாக்குவது, மாகாண அரசிற்குரிய மேலதிக அதிகாரங்களுக்காக போராடுவது** ஆகியனவே அம் மூன்று முடிவுகளாகும்.

அன்று வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடாத்தும்படி எமது கட்சி கோரிய போது இங்கு தேர்தல் நடாத்த முடியாது, அவ்வாறு நடாத்தினால் இரத்த ஆறு ஓடும், முழுமையான அமைதி வந்தால் தான் தேர்தலை நடாத்த முடியும். எனவே தேர்தலில் யாரும் போட்டியிடவோ, பிரச்சாரம் செய்யவோ முன்வரமாட்டார்கள் என்று பலர் பூச்சாண்டி காட்டினார்கள். அப்போது எமது கட்சி தேர்தலை நடாத்தி போட்டிட்டு ஜனநாயக மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. சூழல் மாற்றத்தின் அவசியத்தைப் புரிந்து கொண்டு எமக்கு ஒத்துழைப்பு தந்து இந்த சபையில் அமைந்திருக்கும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் எமது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**அன்று தேர்தலே நடக்க முடியாதென்று கூறிய சிலர் இன்று இந்த மாகாணசபையை கைப்பற்றுவதற்கு குறுக்குவழிகளில் சதித்திட்டம் போட்டு வருகிறார்கள்** என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

மாகாணசபைத் தேர்தல் முடிந்து அரசாங்க நிர்வாகத்தை உருவாக்குவதென்பது கடந்த நான்கு மாதங்களாக பல்வேறு வடிவங்களிலும்

ஒரு விதமாக நகர்ந்து அமைப்பு ரீதியில் ஒழுங்கு முறையாக்கப்பட்டிருக்கிறது. மாகாண அரசாங்கம் தற்போது வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மத்தியில் இருக்கும் எட்டு மாவட்டங்களோடு தனது கைகளைக் கோர்த்து மாகாண அமைப்பிற்கும் மாவட்டங்களுக்குமிடையிலான ஒரு பரவலான இணைப்பையும், நிர்வாக ஒருமைப்பாட்டையும் உருவாக்கிச் செயற்பட ஆரம்பித்திருக்கின்றது.

தற்போது "ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" யாகிய எமது கட்சி முன்னர் தீர்மானித்த மூன்றாவது கட்ட நிலைமைக்கு வந்திருக்கிறது. (அதாவது மேலதிக அதிகாரத்திற்காக மத்திய அரசாங்கத்தோடு போராடுவது) ஈழக் கோரிக்கையை நாங்கள் கைவிட மாட்டோம் என்று கூறிய நேரத்தில் இந்திய அரசு " இது நடைமுறைச் சாத்தியம் இல்லாத கோரிக்கை எனவே நீங்கள் மாகாண அமைப்பை ஏற்க வேண்டும்" என்று கூறியது. அப்போது நாம் இலங்கையில் உள்ள சிங்களப் பேரினவாதிகளை நம்ப முடியாது, அவர்கள் நம்பிக்கை கொள்ளக்கூடிய வரலாற்றையும் கொண்டவர்கள் அல்ல, ஒவ்வொரு கால கட்டத்திலும் வாக்குறுதிகளைத் தருவார்கள். பின்னர் வாக்குறுதிகளை கிழித்து விடுவார்கள். மீண்டும் நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் சூழ்நிலை வரக்கூடாது. எனவே எங்கள் போராட்டம் தொடர்ந்து ஒரே அடியாக முடியட்டும் என்று கூறிய போது இந்திய அரசு "என்னென்ன வாக்குறுதிகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் தருகிறதோ அவற்றை நிறைவேற்றுவதற்குரிய உத்தரவாதத்தைதருவதாகக் கூறினார்கள். அத்தோடு நீங்கள் எப்படியும் அமைப்பு ரீதியாகக் காலடியைப் பதித்த பின்பு தான் அதிகாரங்களுக்காகக் குரல் கொடுப்பது சரியானது என்றும் இந்தியத் தரப்பால் கூறப்பட்டது.

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை நாம் அப்போது " தியறி ஒஃப் fவுட் ஹோல்ட்" என்று நாம் குறிப்பிட்டதுடன் நீண்ட காலமாக நிராகரித்தும் வந்தோம். எனினும் ஈழப் போராட்டத்தில் உள்ளார்ந்த ரீதியாக ஏற்பட்டசிக்கல்களாலும், கோடரிக் காம்புகளால் ஏற்படுத்தப்பட்ட பலவீனம் காரணமாகவும் நாமும் வேறு வழியின்றி இந்த ' தியறி ஒவ் fவுட் ஹோல்ட்" தத்துவத்தைப் பிரயோகிக்க தொடங்கினோம்.

அந்த அடிப்படையில் பதிக்கப்பட்டுள்ள இந்தக் காலடியை மேலும் நகர்த்தக் கூடிய வகையில் அதிகாரத்திற்காக போராடுவதென்ற மூன்றாவது காலகட்டத்திற்கு வந்திருக்கின்றோம் ஏற்கனவே அதிகாரப்பரவலாக்கல்கள் பற்றி சபையில் நான் பல தடவைகள் கூறிய விடயங்களில் முழுமையான உண்மைகளைத் தராமைக்காக என்னை மன்னிக்குமாறு வேண்டுகின்றேன். காலம் கனியும்வரை பொறுமையாகச் செயலாற்ற வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு நடந்தேன்.

இந்த மாகாணஅரசுப் பேரவை உறுப்பினர்கள் மட்டுமல்ல இந்த நாட்டு மக்களும், சர்வதேசச் சக்திகளும் அதிகாரப்பரவலாக்கல் உண்மையாக நடைபெறுகின்றதா? என்பதை அக்கறையோடு கவனித்து வருகின்றார்கள். சரியாகவும், முழுமையாகவும், தீர்மானதுமான கருத்துக்களை வெளிப்படுத்தாமல் சிலவற்றை வெளிப்படுத்தவும், சிலவற்றை நகர்த்துவதும், சிலவற்றை சொல்லாமல் விழுங்கி விடுவதுமான சில போக்குகளை இதுவரை கடைப்பிடிக்க வேண்டிய இக்கட்டான நிலைமையில் இருந்தேன். காரணம் கனிவதற்கு முன் அடித்தால் வெம்பி விடும். வெம்பவிடாமல் கனியை ஒழுங்காகப் பறித்தெடுக்க வேண்டிய கடமையை மேற்கொள்ள விரும்பினேன், அந்தக் காலம் வரைக்கும் என்னென்ன வேலைகளைச் செய்து முடிக்க வேண்டுமோ அதலைச் செய்து முடிக்க வேண்டிய கடமையும் எனக்கு இருந்ததால் சில விடயங்களை மறைத்தும், விழுங்கியும் கூறினேன். இதன் விளைவாக ஜனாதிபதி அதிகாரப்பரவலாக்கலைச் செய்ய விரும்பினாலும் சில அதிகாரிகள் தடைக்கற்களாக நிற்கின்றார்கள் என்றும், சில அமைச்சர்கள் நல்லவர்கள், சில அமைச்சர்கள் பிரச்சனைக்குரியவர்கள் என்றும், ஆங்காங்கே மழுப்பி சில விடயங்கள் நடப்பது போலவும், இடை நடுவில் நின்று கருத்துக்களை கூற வேண்டியவனாக இருந்தேன். ஆனால் இன்று அவ்வாறின்றி யதார்த்த பூர்வமான நிலைமைகளை தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அரசாங்கம் என்பது ஜனாதிபதி, மந்திரி சபை, அதிகாரிகள் அத்தனை பேரையும் சேர்ந்த அமைப்புத்தான். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. எனவே அதிகாரப்பரவலாக்கல் நடந்தாலும் சரி, நடக்கா விட்டாலும் சரி, கொடுத்த வாக்குறுதிகள் ஒழுங்காக நிறைவேற்றப்படா விட்டால் அவர்கள் அனைவருமே பொறுப்பேற்க வேண்டும்.

இந்த நாட்டில் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவி வந்த அராஜக ஆயுதங்களின் ஆட்சி இன்று குறைக்கப்பட்டிருக்கிறது. இதை முடிவிற்கு கொண்டுவர வேண்டும். இதற்காக நாம் அனைவரும் உழைக்க வேண்டும். அராஜக ஆயுதங்களின் ஆட்சி மறைந்து **சட்டத்தின் ஆட்சி உருவாக்கப்படல் வேண்டும்**. யாராவது பாதிக்கப்பட்டால் அவர்கள் சட்ட பூர்வமாக குரல் எழுப்பவும், பாதுகாத்துக் கொள்ளக்கூடியதுமான நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி நிலவும் சமுதாய அமைப்பை உண்மையான சமாதானத்தினாலும் ஜனநாயகத்தினாலுமே உருவாக்க முடியும். எனவே ஜனநாயகம், சமாதானம் என்று ஒப்பாரி வைப்பதை விடுத்து கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் அதிகாரப்பரவலாக்கலை செய்ய வேண்டும். அதற்குரிய ஒரு நிலைமையை இந்த மாகாண அரசுப் பேரவை உருவாக்க வேண்டும். அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான முப்பது பிரேரணைகளை இச்சபை முன் சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருக்கின்றேன்.

## மாகாண சபையா?

## மாகாண அரசாங்கமா?

மாகாண சபை என்பதா? மகாண அரசு என்பதா? என்பது தொடர்பாக மத்திய அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு மாகாண அமைப்புக்களும் தங்களை ஒவ்வொரு விதமாக அழைப்பதால்குழப்பங்களும், சிக்கல்களும் ஏற்படுகின்றன. எனவே நீங்கள் மாகாண சபை என்றே அழைத்துக் கொள்ளுங்கள் என்று நாசூக்கா மத்திய அரசு சமாளிக்க முயல்கின்றது. மாகாண அரசாங்கம் என்று குறிப்பிடக் கூடாது என பல நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றார்கள். அதற்கு விளக்கமாக ஒரு நாட்டில் ஒரு அரசாங்கந்தான் இருக்க வேண்டும் என்கிறார்கள்.ஆட்சியில் இருப்பவர்களுக்கு எங்கே குழப்பம் வருகிறது என்றால் என்னைப் பொறுத்தளவில் அவர்கள் சபையையும், பாராளுமன்றத்தையும் போட்டுக் குழப்பி பாராளுமன்றம் என்று சொல்வதுதான் அரசாங்கம் ஆகையால் எப்படி இந்தச் சபையை பாராளுமன்றமென்று சொல்லலாம் என்று வினவுகின்றார்கள்.

நாங்கள் எந்த கட்டத்திலும் இந்த சபையை பாராளுமன்றம் என்று கூறவில்லை. இது மாகாண சபை என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறோம். இது மத்தியிலே எவ்வாறு பாராளுமன்றம் இருக்கின்றதோ அதே வகையில் பாராளுமன்றத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் மாகாண மட்டத்தில் இருக்கக் கூடியதான ஒரு சபையாகும் இதற்கு சட்டங்களை ஆக்கும் அதிகாரங்கள் இருக்கின்றன. அத்தோடு இந்த மாகாண அமைப்புக்கு இந்த சபையை விட ஒரு ஆளுநர் இருக்கின்றார். அமைச்சரவை ஒன்று இருக்கின்றது. அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் இருக்கின்றது. இவ்வளவையும் கொண்டதுதான் அரசாங்கம் அதுமட்டுமல்ல ஒரு அரசினுடைய அமைப்பில் சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் இவற்றோடு அதற்கு படைகள் இருக்கும். நாட்டினுடைய தேசியப் பாதுகாப்புக்காக மத்திய அரசாங்கமானது இராணுவம், கடற்படை, ஆகாயப்படை என்பவற்றைக் கொண்டியிருப்பது போல மாகாண அரசாங்கத்திற்கு மாகாணத்தினுடைய பாதுகாப்பு தொடர்பாக மாகாண பொலிஸ் படையை வைத்துக் கொள்ளக்கூடிய அதிகாரம் 13வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே ஒரு அரசாங்கத்திற்கு இருக்க வேண்டியதான அலகு, கூறுகள் அத்தனையையும் கொண்டிருக்க கூடியதான இந்த அமைப்பினை அரசாங்கம் என்று கூறக் கூடாது என்று சொல்வது தவறு என்பது எனது கருத்து. இது தொடர்பாக சபை தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## மாகாண அமைச்சரவை

மாகாண அமைச்சரவையில் ஐந்து உறுப்பினர்கள் தான் இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இருந்து வருகின்றது. ஆனால் மத்திய அரசாங்கத்தில் அவ்வாறு ஒரு கட்டுப்பாடு இல்லை. இப்போது 72 பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாக இருக்கின்றார்கள். அதாவது 22 அமைச்சர்களும், (அமைச்சரவை அந்தஸ்துள்ள) 50 இராஜாங்க அமைச்சர்களும் இருக்கிறார்கள். மாகாண அரசிற்கு நிதிசம்பந்தமான பல அமுலாக்கல்களை செய்ய வேண்டி இருப்பதால் ஆகக் குறைந்தது ஐவரை அமைச்சரவை உறுப்பினர்களாக வைத்துக் கொள்ளலாம் என்று சட்டத்திருத்தம் செய்யப்பட வேண்டுமென்றும் உறுப்பினர்களின் விகிதாசாரத்திற்கேற்ப அமைச்சர்களுடைய எண்ணிக்கையை மாற்றிக் கொள்வதற்கு மாகாண அரசாங்கத்திற்கு சட்ட பூர்வமான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை இந்தச் சபை கோர வேண்டுமென்றும் நான் முன்மொழிகின்றேன்.

## உள்நாட்டலுவல்கள் நிர்வாகம்

ஏனைய மாகாண அரசுகளும் வடக்கு - கிழக்கு மாகாண அரசும் உருவாக்கப்பட்டு ஆறேழு மாதங்கள் கடந்த போதிலும் உள்நாட்டலுவல்கள் நிர்வாகம் யாருடைய கையில் என்பது பற்றி தீர்மானமாக முடிவு செய்யப்படவில்லை. கடந்த பாராளுமன்ற அமைச்சர், "அரசாங்க அதிபர் விடயமானது அரசியல் அமைப்புச் சட்டத்திலே மத்திய அமைச்சரவையின் கீழ் இருப்பதால் அரசாங்க அதிபர் நியமனத்தை மட்டும் மத்திய அமைச்சரவை வழங்கும். ஏனைய விடயங்களில் அரசாங்க அதிபர்கள் மாகாண அரசின் கட்டுப்பாட்டிற்கு கீழே இயங்குவார்கள். இவர்களுக்கு கீழே உள்ள உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்கள் மாகாண அரசின் ஆட்சிக்குக்கட்டுப்படுவார்கள்" என்று ஒப்புக் கொண்டார்.

ஆனால் இப்போது "அரசாங்க அதிபர் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருப்பார்" என்று கூறுகிறார்கள். அப்படியாயின் உதவி அரசாங்க அதிபர்களும், கிராம சேவகர்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கு கீழேயே இது பற்றி நான் விளக்கம் கேட்டபோது "மத்திய அரசாங்கத்திற்கு எல்லா மட்டத்திலும் உத்தியோகத்தர் தேவை. நீங்கள் மாகாண அரசுக்கு என்று உத்தியோகத்தர்களை நியமித்துக் கொள்ளுங்கள்" என்று பதிலளிக்கப்பட்டது. கோட்ட அடிப்படையிலும், கிராமிய அடிப்படையிலும் குறைந்தபட்சம் பத்தாயிரம் பேருக்காவது நியமனம் கொடுக்காவிட்டால் உள்நாட்டலுவல்கள் சிறப்பாக இயங்க முடியாது. ஏற்கனவே அனுபவம் உள்ளவர்கள் பதவியிலிருப்பதால் புதிய வெற்றி

டங்களை நாம் நிரப்ப முற்படும் போது ஆளணி பற்றுக்குறை உருவாகும். புதிதாக நிரப்பப்படுவர்கள் அனுபவங்களைப் பெற காலகட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கும் இதனுல் மாகாண அரசாங்கம் மாவட்ட மட்டத்திலோ, கோட்ட மட்டத்திலோ, கிராம மட்டத்திலோ, செயற் பட முடியாத நிலைமை ஏற்படும். அத்தோடு மத்திய, மாகாண அதி காரிகள் செயற்படத் தொடங்கும் போது ''இரட்டை ஆட்சி முறை'' தோன்றும். ''இரட்டை ஆட்சி முறை பற்றிய அனுபவம் இலங்கைக்கு கிடையாத காரணத்தால் இவ்வாறு சிந்திக்கிருர்கள் போலும்.

இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பனிகளும், பிரித்தானிய முடியாட்சி ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் ஆட்சி நடாத்திய போது இழுபறிகள், கத்திக்குத்துகள் எல்லாம் நடை பெற்றன. அந்த அனுபவம் இந்தியா விற்கிருக்கிறது.

இந்த '' இரட்டை ஆட்சி முறை '' என்பது குறுகிய காலத்திற் குள்ளேயே போட்டி ஆட்சிமுறையாக மாறிவிடும். போட்டி ஆட்சியாக மாறினுல் யார்பெரியவர்? என்கின்ற நிலைமையேற்பட்டு இந்த நாட்டி லும், எமது பிரதேசங்களிலும் அமைதி, ஜனநாயகம், சமாதானம் ஆகியன மேலும் சீரழிந்து போவதற்கே வழிவகுக்கும். ஆகையால் அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்கள் உட்பட அனைத்து நிர்வாக சேவை உத்தியோகத்தர்களும் மாகாண அரசின் கீழ் செயற்பட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சபை கோர வேண்டும்.

அத்தோடு இந்திய மாநில அரசுகளுக்கு உரியதுபோல புதிய மாவட் டங்களை உருவாக்குவதும், மாவட்டங்களை இணைப்பதும், மாவட்ட எல்லைகளை நிர்ணயிப்பதுமான அதிகாரம் ( இலங்கையிலும் ) மாகாண அரசுகளுக்கே வழங்க வேண்டுமென்று நான் பிரேரிக்கிறேன்.

## உள்ளூராட்சி அமைப்பு.

பதின் மூன்ருவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி அமைப்பைப் பொறுத்தவரையில் முழுமையான அதிகாரம் பரவலாக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் மத்திய அரசினுல் நெருக்கடிகள் தரப்படுகின்றன. உள்ளூர் நிர்வாக அதிகாரங்களைத் தராது மேலிருந்தும், உள்ளூராட்சி அமைப்பின் அலகுகளான மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை என்பவற்றின் மீது மாகாண அரசாங்கம் எதை யுமே தீர்மானிக்க முடியாதவாறு கட்டுமட்டான அதிகாரங்களைத் தந்து கீழிருந்தும் நெருக்கடிகள் தரப்படுகின்றன.

ஆகவே உள்ளூராட்சி அமைப்பின் நிர்வாகத்தில் இருக்கக் கூடிய அனைத்து விவகாரங்களையும் தீர்மானிக்கின்ற அதிகாரம் மாகாண அரசாங்கத்திற்கு இருக்க வேண்டுமென்று இந்தச் சபை தீர்மானிக்க வேண்டுமென்று நான் பிரேரிக்கின்றேன். அத்தோடு உள்ளூராட்சி அமைப்பின் அலகுகளான மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை என்பவற்றின் எல்லைகள், வட்டாரங்களின் விஸ்தீரணம், வட்டாரங்களின் எண்ணிக்கை ஆகியவற்றையும் தீர்மானிக்கும் அதிகாரம் மாகாண அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்றும் இந்தச் சபை முன் 'பிரேரிக்கிறேன்.

## பொது ஒழுங்குச் சட்டம்.

13 வது திருச்சட்டத்தின்படி '' பொலீஸ் பரிசோதகர் தலைமை அதிபர்'' (ஐ. ஜி. பி) முதலமைச்சரின் ஒப்புதலுடன் '' பிரதிப் பொலீஸ் பரிசோதகர் தலைமை அதிபதியை'' (டி. ஐ. ஜி.) நியமிக்க வேண்டும். பொலீஸ் பரிசோதகர் தலைமை அதிபதியை நான் சந்தித்து '' பிரதிப் பொலீஸ் பரிசோதகர் தலைமை அதிகாரியை'' நியமிக்குமாறு கேட்ட போது '' தேசிய பொலீஸ் ஆணைக்குழு'' உருவாக்கப்பட்டாலே இந்த நியமனத்தை செய்ய முடியும்'' என்று அவர் கையை விரித்து விட்டார். ''தேசிய பொலீஸ் அணைக்குழு''அமைக்கப்படாததால்''பிரதிப் பொலீஸ் பரிசோதகர் தலைமை அதிபதியை (டி. ஐ. ஜி.) நியமிக்க முடியவில்லை. இதனால் '' மாகாண பொலீஸ் ஆணைக்குழு'' உருவாக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அண்மையிலே இந்தியாவிற்கு சென்ற வேளை இதுபற்றி இந்திய அதிகாரிகளோடு பேசினேன். மாகாண அரசாங்கம் ஒன்று உருவாக்கப் பட்டவுடன் மாகாணத்தில் இருக்கக்கூடிய எல்லா உத்தியோகத்தர்களும் முதற்கட்டமாக மாகாண அரசாங்கத்திடமே ஒப்படைக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். பொலீஸ் என்றால் என்ன ஏனைய சேவைகளில் உள்ளவர்கள் என்றால் என்ன குறித்த மாகாணத்தில் உள்ள ஊழியர்கள் அனைவரும் மாகாண அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பின்னர் மத்திய அரசு தனக்குரிய சேவைகளை உருவாக்கி விண்ணப்பம் கோரி நியமனங்களைச் செய்யலாம்.

இங்கோ எல்லாம் தலைகீழாக நடக்கிறது. பொலீஸ்காரரிடம் நீங்கள் மாகாண அரசின் கீழ் வேலை செய்கிறீர்களா? மத்திய அரசின் கீழ் வேலை செய்கிறீர்களா? என்று கேட்கிறார்கள். மாகாண அரசாங்கம் என்றதே நாட்டிற்கு புதிதான அம்சமாகும். இந்த நிலையில் வர விரும்புவார்களா? என்பது சிந்தனைக் குரியது. மத்திய அரசு இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி மத்திய அரசிலா? பணிபுரியப் போகிறீர்கள் என்ற

முடிவை உத்தியோகத்தர்கள் கைகளில் விட்டிருக்கிறது. இதன் மூலம் பொலீஸ்காரர்கள் மாகாணசபையில் வேலை செய்யத் தயாராக இல்லை என்று காட்டுவதற்காகவே இந்தக் கணிப்பீடு நடக்கிறதென்று நான் கருதுகின்றேன். எனவே பொலீஸ் சேவை மற்றும் ஏனைய சேவைகளில் உள்ளவர்கள் உடனடியாக மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று இச்சபை கோரவேண்டும்.

13 வது திருத்தச் சட்டத்தின் 28 ம் பக்கத்திலே தேசிய பொலீஸ் பிரிவினால் கட்டுப்பாடு செய்யப்படவேண்டிய தவறுகள் பற்றிய பட்டியல் உள்ளது. அரசாங்கத்திற்கெதிரான தவறுகள்; ஆயுதப்படையினர் தொடர்பான தவறுகள்; நாணயங்கள், முத்திரைகள் தொடர்பான தவறுகள்; ஜனாதிபதிக்கெதிராகப் புரியப்படும் தவறுகள்; பகிரங்க அலுவலர், அமைச்சர்கள், நீதிபதிகளுக்கெதிராக புரியப்படும் தவறுகள்; அரசாங்க சொத்துக்கள், கம்பனி, தாபன ஆதனங்கள் தொடர்பில் புரியப்படும் தவறுகள்; தேசிய பாதுகாப்பு, அத்தியாவசிய சேவைகளுக்கெதிரான தவறுகள், ஜனாதிபதியினால் அவ்வப் போது கெசற் மூலம் பிரகடனப்படுத்தப்படும் தவறுகள். சர்வதேசக் குற்றங்கள் என்பனவே அவையாகும்.

இவ்வளவையும் தேசிய பொலிஸ் பிரிவு செய்வதாக இருந்தால் மாகாண பொலிசுக்கு என்ன வேலை? சம்பளம் வேண்டி படுத்திருக்க வேண்டியதுதான்.

ஆகவே எமக்கு வழிகாட்டியாக உள்ள இந்தியாவின் அரசியலமைப்பையும் சட்டவிதிகளையும் பின்பற்றி மாகாணப் பொலீஸ் அமைப்பை ஆற்றலுள்ளதாக செயற்படச் செய்யத்தக்கவகையில் 13 வது திருத்தச் சட்டத்தினை மாற்றியமைக்க வேண்டுமென்று இச்சபை கோர வேண்டும்.

இல்லையேல் மாகாணப் பொலீசும், தேசியப் பொலீசும் வீதிக்கு வீதி சண்டை பிடிக்கும் நிலைமையே உருவாகும்.

## ஆயுதப்படைகள்

இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆயுதப் படைகள், மற்றும் ஏனைய சேவைகளில் தேசிய இன விகிதாசாரம் பிரதி பலிக்கப்படல் வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இன விகிதாசாரத்தை பராமரிப்பதற்குரிய எந்த விசமுன் நடவடிக்கைகளும் (கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த போதிலும்) இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. தரைப்படை, கடற்படை, விமானப்படை போன்றவற்றில் தற்போது வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. நிரப்பிய பின்னர் சொல்லுவார்கள் வெற்றிடங்கள் இல்லை

என்று. எனவே உடனடியாக நியமனம் செய்யப்படுவதை நிறுத்த வேண்டுமென்றும் தேசிய இன விகிதாசாரத்திற்கேற்ப நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் இந்தச் சபை கோர வேண்டும்.

பேச்சு வார்த்தையின் போது ஜனாதிபதி, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஆகியோர் பிரேரித்ததன் பிரகாரம் '' தமிழ் பேசும் இராணுவ ரெஜிமன்ற்'' ஒன்றை அமைக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் இப்போது கேட்கிறார்கள் இராணுவத் தொண்டர்படையை உருவாக்குவோமா? என்று அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. உருவாக்க ஒப்புக்கொண்ட '' தமிழ் பேசும் இராணுவ ரெஜிமன்ற்'' உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இச்சபை கோர வேண்டும்.

**ஆயுதப்படைகளிலும், ஏனைய சேவைகளிலும் தேசிய இன விகிதாசாரம் பேணப்பட வேண்டுமென்று இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால் இந்தியாவிற்கும் இவ்விடயத்தில் பொறுப்பு இருக்கின்றதென்பதை இச்சபை உணர்த்த வேண்டும்.**

## ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள்

இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் எதற்கு இருக்கின்றது? மாகாண அரசாங்கம் ஒன்று இங்கு இருக்கின்ற நிலையில் சிவில் நிர்வாகத்தை நடாத்துவதற்கு இராணுவ இணைப்பதிகாரிக்கு எந்தவித கட்டுப்பாடும் கிடையாது. தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களை பின்வாங்கி சொல்லுமாறு இந்தச் சபை தீர்மானிக்க வேண்டுமென்று நான் பிரேரிக்கிறேன்.

அத்தோடு இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தத்தின் பின் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா இராணுவமானது பல அத்துமீறல்களைப் புரிந்திருக்கிறது. மகாரம்பைக்குளம், அரிப்பு போன்ற இடங்களில் அத்துமீறல்களையும், கொலைகளையும் புரிந்திருக்கின்றனர். இந்த அத்துமீறல்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ள விசாரணைக் கமிசனை ஸ்ரீலங்கா அரசு ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்தச்சபை கோரவேண்டும்.

அத்தோடு சிவில் நிர்வாகங்களில் இராணுவத் தலையீடு ஏற்படுவதை முற்றாகத்தடுக்க வேண்டும் இராணுவ இணைப்பதிகாரி சிவில் நிர்வாகங்களில் தலையிடுவது தடைசெய்யப்படுவதுடன் அத்தகைய பதவியை ஒழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சிவில் நிர்வாகங்களில் அவர்களைத் தலையிட வேண்டாம் என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் இச்சபை கோரவேண்டும்.

மேலும் பட்டினசபைகள், நகரசபைகள், வைத்தியசாலைகள், மத வழிபாட்டிடங்கள், மற்றும் அரசாங்கப் பொதுக்கட்டிடங்களில் இயங்கி வரும் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் அவ்விடத்திலிருந்து அகற்றப் பட்டு பழைய முகாம்களுக்கு அவர்கள் திரும்பிச் செல்ல மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்த சபை கோரவேண்டும்.

## பாதுகாப்பு ஒழுங்கு

நாட்டில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகள் காரணமாக தமிழ் பேசும் மக்கள் பாதுகாப்பாக போக்குவரத்துச் செய்யமுடியவில்லை வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிர்வாக தலைநகரமான திருகோண மலைக்கு போக்குவரத்து செய்வதென்பது உத்தரவாதமற்ற நிலையிலேயே இருக்கிறது. மாகாணசபை உறுப்பினரொருவர் திருகோணமலைக்கு வருவதென்றால் கொழும்புக்கு போய் அங்கிருந்து வரவேண்டும். நாட் டின் எல்லாப் பிரதேசங்களிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகா- ணத்திலும் பாதுகாப்பு நெருக்கடிகள் காரணமாக அன்றாடம் பொது மக்கள் மட்டுமல்ல மாகாண அரசும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இதற்கொரு தீர்வினைக் காணு மாறு மத்திய அரசாங்கத்தை இந்தச்சபையானது வற்புறுத்தவேண்டும் நிர்வாகத் தலைநகரம் சிறப்புற இயங்கி மக்களோடு நெருக்கமாக இருக்கவேண்டுமானால் பாதுகாப்பு ஒழுங்குகள் ஸ்திரப்படுத்தப்படல் வேண்டும. அந்தப் பாதுகாப்பினை ஏற்படுத்தக் கூடியதாக அதிகாரப் பரவலாக்கலை மிக விரைவில் செய்யுமாறு இந்தச்சபை கோரவேண்டும்.

## முடிக்குரிய காணிகள்

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இந்நாட்டு விவசாயிகளி டமிருந்து பறித்தெடுத்த நிலங்களையே ''முடிக்குரிய காணி''களாகப் பிர கடனப்படுத்தியதுடன் பிரித்தானிய பிரஜைகளுக்கு விற்றார்கள். பல ஆயி ரக்கணக்கான ஏக்கர் காணிகளை பிரித்தானிய தனிநபர்கள் இதன் மூலம் இந்த நாட்டில் பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறு உருவாக் கப்பட்ட (முடிக்குரிய) காணிகளை முடிக்குரிய காணிகளாக இருப்பதால் பர வலாக்கம் செய்ய முடியாது என இலங்கை - அரசாங்கம் கையை விரித்துள் ளது. ஆனால் இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதலாவது உறுப்புரை ''இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி உயர் சட்டமாக அரசியல் அமைப்புச் சட்டம் விளங்கும்'' என்று குறிப் பிடுகின்றது. ஆகவே இந்த முடிக்குரிய காணிகள் அரசியல் அமைப்புச் சட் டத்திற்கு அப்பாற் பட்டதாக இருக்கமுடியாது. இது பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு இருக்கின்றது. எனவே மாகா

ணத்தில் இருக்கக்கூடிய நிலங்களை மாகாண அரசாங்கத்தினது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று இந்தச்சபை கோர வேண்டுமென்ற பிரேரணையை நான் முன்மொழிகின்றேன்.

## மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம்.

மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன விடயங்களில் இரண்டு மாகாணங்களுக்கிடையே பிரச்சனைகள் ஏற்படும் போது ''தீர்க்கும் இல்லமாக'' மத்திய அரசு இருக்க வேண்டுமே தவிர வேறு தலையீடுகளோ, அதிகாரங்களோ இருக்கக் கூடாது என்ற தீர்மானத்தை இந்தச் சபை எடுக்க வேண்டும்.

ஊவா மாகாணக் காணி அமைச்சர் ''தங்கள் மாகாணத்திலிருந்து வடக்கு கிழக்கு மாகாணத்தினூடாக ஒடுகின்ற நதியின் நீருக்குவரி தர வேண்டும்''. என்று ஒரு கடிதம் எழுதினர். அதற்கு நான் ''அப்படி வரி செலுத்த முடியாது. முடியுமானல் அத்தண்ணீரை எமது பகுதியால் ஓடாமல் தடுத்துக் கொள்ளுங்கள், இல்லையேல் எமது மாகாணத்தின் ஊடாக ஓடும் ஒவ்வொரு கலன் தண்ணீருக்கும் நீங்கள் வரி செலுத்த வேண்டும். அத்தண்ணீர் எங்களிடைய நிலத்தை பாதிக்கிறது'' என்று அந்த மாகாண அமைச்சரிடம் கூறினேன்.

இந்த நாட்டிலே மாகாண அரசாங்கம் உருவாக்கப்பட்டது பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளை உருவாக்குவதற்கல்ல. இந்த நாட்டில் ஓடிய இரத்த ஆற்றை நிறுத்தும் நோக்கத்தோடே உருவாக்கப்பட்டது. எனவே அந்த நோக்கம் நிரந்தரமானதாக இருக்க வேண்டும்.

## நீர் விநியோகம்

இந்திய அரசியலமைப்புச்சட்டத்திலே நீர் விநியோகம், நீர்ப்பாசனம் என்று இரண்டு விடயங்கள் இல்லை. நீர் விநியோகம் என்ற தலைப்பின் கீழே நீர் விநியோகம், நீர்ப்பாசனம் என்ற இரண்டு அம்சங்களும் காணப்படுகின்றன. அவர்களுக்கு இது ஒரு பிரச்சனையாக இல்லை. அங்கு யாரையும் குடியேற்றி அணைத்து அழைப்பதற்கான முனைப்புகள் இல்லை. இந்திய அரசியலமைப்பு சட்டத்திலுள்ளது போல நீர் விநியோகம் என்ற தலைப்பை போடாமல் கீழே உள்ள நீர்ப்பாசனத்தை மட்டும் போட்டிருக்கிறார்கள். நீர் விநியோகம் என்ற தலைப்பை விட்டுவிட்டபடியால் நீர் விநியோகம் யாருடைய பொறுப்பில் என்று கேட்டபோது ''சட்டத்திலே விடுபட்டவையெல்லாம் மத்திய அரசிற்குரியவை'' என்கிறார்கள் எனவே இந்த விடயத்தின் தெளிவான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று பிரேரிக்கிறேன்.

13வது திருத்தச் சட்டத்தின் பின்னிணைப்பு இரண்டின் இரண்டாவது பிரிவாக மாகாணங்களுக்கு இடையிலான நீர்ப்பாசன, நில அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக 2:2ம் பிரிவில் உள்ள "இச் செயற்திட்டங்கள் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்" என்ற ஏற்பாடு "இச் செயற்திட்டங்கள் மாகாண அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்" என்று மாற்றப்பட வேண்டும் என்றும் பிரேரிக்கிறேன்,

## காடுகள்

"காடுகள்" என்ற அம்சத்திலிருந்து நிலத்தையோ, அபிவிருத்தியையோ பிரிக்கமுடியாது. கடந்த நாற்பது வருடகால வரலாற்றில் இனங்களுக்கிடையே ஐக்கியமின்மையும், முரண்பாடுகளையும், வளர்ப்பதற்கு நீர்ப்பாசனம், நிலம், காடுகள், மீன்பிடி என்ற நான்கு அம்சங்களையும் இலங்கை அரசு பயன்படுத்தி வந்திருக்கிறது. இந்த நான்கு அம்சங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது கூடவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் ஏற்படுகின்றது. இதனால் தமிழ்பேசும் மக்கள் மத்திய அரசின் அபிவிருத்தித்திட்டங்களை சந்தேகக் கண் கொண்டு நோக்குவதுடன் வெறுப்படைய வேண்டிய நிலையிலும் இருக்கிறார்கள்.

எனவே வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள காடுகள் அனைத்தும் மாகாண அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு மத்திய அரசினை இச்சபை கோர வேண்டும்.

## கடற்றொழில்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே "இந்தியாவின் ஆள்புல எல்லைக்கு அப்பாற்பட்ட கடற்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மீன்பிடித் தொழிலைத் தவிர ஆள்புல எல்லைக்குட்பட்ட அனைத்து மீன்பிடிகளும் மாநில அரசாங்கங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அதை அடியொற்றி எமது பதின் மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்திலே "ஆள்புல நீர்ப்பரப்பிற் கப்பால்" என்ற வாசகம் இடம் பெற்றிருந்தபோதிலும் அவ்வாசகம் மாகாண சபைக்கான நிரலில் குறிப்பிடப்படாமையால் நடைமுறைச் சிக்கல்கள் மத்திய அரசாங்க அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பதின் மூன்ருவது திருத்தச் சட்டத்திலே மத்திய அரசின் (பாராளு மன்றத்தின்)அதிகாரங்களை கொண்டுள்ள ஒதுக்கிய நிரலில்''ஆள்புல நீர்ப் பரப்பிற் கப்பால் மீன்பிடித்தலும், மீன்பிடித் தொழிலும்'' மத்திய அரசிற் குரியது என்று குறிப்பிடப்படுகிறது. மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் தீர்மானிக்கக் கூடிய விடயங்களைக் கொண்ட ''ஒருங்கியை நிரலில்'' 19வது விடயமாக ''கடற்றெழில் ஆள்புல நீர்ப்பரப்பிற்கப் பால் மீன்பிடித்தல் அல்லாதது'' என்ற அம்சம் குறிப்பிடப்பட்டிருக்கி றது. இதன் மூலம் ஆள்புல நீர்ப்பரப்பிற்குட்பட்ட கடற்றெழிலை தீர்மானிக் கும் அதிகாரமும் மத்திய அரசிற்கே உரியதாகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை ஆள்புல எல்லைக்குள்ளும், ஆள் புல எல்லைக்கப்பாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கடற்றெழிலில் - மீன் பிடிக் கூட்டுத்தாபனம், மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தானபம், மீன் பிடிக் கூட்டுறவு நிறுவனம் ஆகியனவே கணிசமான அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன. பதின் மூன்ருவது திருத்தச் சட்டத்தில் கடற்றெ ழில் தொடர்பான அதிகார ஏற்பாடுகள் மாகாண சபை நிரலில் குறிப்பி டப்படாமல் ஒருங்கியை நிரலிலேயே ''ஆள்கடல் எல்லைக்குட்பட்ட மீன்பிடி'' என்ற அம்சம் இடம்பெற்றிருக்கிறது. இதனுல் மேற்படி மூன்று நிறுவனங்களின் அதிகாரங்களைப் பரவலாக்குவது தொடர்பான முடிவுகளை செய்யும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சருக்குரியதாகின்றது.

மேலும் மேற்படிக் கூட்டுத்தாபனங்கள் விசேட பாராளுமன்றச் சட் டத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருப்பதால் பாராளுமன்றமே அக் கூட்டுத் தாபனங்களின் அதிகாரங்களைப் பரவலாக்குவது தொடர்பாக தீர்மாணிக்க முடியும்.

ஆனுல் இதுவரை கடற்றெழில் அமைச்சரோ, பாராளுமன்றமோ அதிகாரத்தைப் பரவலாக்க முயற்சிக்கவில்லை. இதனுல் மீன்பிடி தொடர் பான கூட்டுத்தாபனங்களதும், கூட்டுறவு நிறுவனத்தினதும் சொத்துக்கள், ஊழியர்கள், வள்ளங்கள், மீன்பிடி உபகரணங்கள் என்பன மாகாண அர சின் வசம் ஒப்படைக்கப்படவில்லை.

எனவே இவ்விடயத்தில் சபையானது தீர்க்கமான தீர்வினைக்கோர வேண்டும். மொத்தமாக அனைத்து கூட்டுத்தாபனங்களும் கொண்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாண விடயங்கள் தொடர்பாக முழுமையான அதி காரப் பரவலாக்கலைச் செய்வதற்கு விசேட பாராளுமன்றச் சட்டம் கொண்டுவரப்படல் வேண்டுமென்றும் ஒருங்கியை நிரலில் 19வது விட யமாக உள்ள''கடற்றெழில் ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கப்பால் மீன் பிடித்தல் அல்லாதது'' என்ற விடயம் மாகாண சபைக்குரிய நிரலிற்கு மாற்றப்பட வெண்டுமென்றும் இச்சபை மத்திய அரசாங்கத்தைக்கோர வேண்டும்.

அத்துடன் ''பருவகால மீன்பிடித் தொழில்'' என்ற கோதாவில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ''சிங்கள மீனவர் குடியேற்றம்'' தொடர்பாகவும் நாம் பாராமுகமாக இருக்கக் கூடாது. எனவே ''வடக்கு - கிழக்கு மாகாண கடல் எல்லேக்குள் மாகாண அரசின் அனுமதியில்லாமல் யாரும் கடற்ருெழில் செய்யக் கூடாது'' என்ற விடயமும் சேர்க்கப்பட வேண்டும்.

## பெருந் தெருக்கள், வீதிகள்

இந்திய அரசியலமைப்பில் உள்ளது போலவே பதின்மூன்ருவது திருத்தச் சட்டத்திலும் மாகாணசபை நிரலின் ஆருவது விடயமாக ''தேசியப் பெருவழிகள், மீதான பாலங்களும் பாதைகளும்'' என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனுல் ''தேசிய பெருவழிகள்'' என்பதை பொருள் கோடல் செய்வதில் தான் பிரச்சனே ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் தேசியப் பெருவழிகள் என்பதைப் பின்வருமாறு பொருள்கோடல் செய்கிருர்கள் ''மாகாண தலேநகரங்களே இணேக்கின்ற வீதிகளும், மத்திய தலேநகரை இணேக்கின்ற வீதிகளும் தேசிய பெருவழிகளாகும். இலங்கையில் வீதிகளே பராமரித்து வரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை'' ஏ, பி, சி வகையான வீதிகள் தேசிய வீதிகள் என்கிறது. இதனுல் டி, ஈ வகையான வீதிகளே மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைத்திருக்கிறது. பின்னர் ஜனுதிபதியிடம் நான் நடாத்திய பேச்சுவார்த்தைகளேத் தொடர்ந்து 'சி' வகையான வீதிகளேயும் தர ஒப்புக் கொண்டிருக்கிருர்கள்.

எனவே இந்தியாவை அடியொற்றியதாக இரண்டு மாகாணங்களின் தலேநகரங்களே இணேக்கின்ற வீதிகளேயும், மத்திய தலேநகரத்தை இணேக்கின்ற வீதிகளேயும் தேசிய பெருவழிகளாக ஏற்றுக்கொண்டு ஏனேய வடக்கு - கிழக்கு மாகாண வீதிகளே எம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தச் சபை கோரவேண்டும்.

## தேசிய போக்குவரத்தும், மோட்டார் வாகன உரிமக் கட்டணமும்

தேசிய போக்குவரத்தைப் பொறுத்தவரை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் போலவே பதின்மூன்ருவது திருத்தச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாகாண சபை நிரலின் எட்டாவது பிரிவில்

''மாகாணத்தினுள் வீதிப் பயணிகள் வண்டிச் சேவைகளையும், மோட்டார் வாகனங்களின் மூலம் பண்டங்களை ஏற்றிச் செல்வதையும் ஒழுங்கு படுத்தலும், மாகாணங்களுக்கு இடையேயான வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்தலும்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் பாராளுமன்றத்திற்கென ஒதுக்கிய நிரலில் ''தேசியப் போக்குவரத்து என்பது (அ) புகையிரதச் சேவைகள்; (ஆ) தேசிய பெருந்தெருக்கள் என பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட பெருந்தெருக்கள்; அத்துடன் (இ) புகையிரத, தரை, கடல், வான் மார்க்கமாக, அல்லது இயந்திரப் பொறிமுறையால் உந்தப்படும் கலன்கள் மூலம் தேசிய நீர்வழிகள் மார்க்கமாக பயணிகளையும், பண்டங்களையும் காவுதல்'' என்ற ஏற்பாடு தேசிய போக்குவரத்தில் மாகாண அரசாங்கத்தினை கையறு நிலைக்குத் தள்ளியிருக்கின்றது.

மகாண அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் போக்குவரத்து தொடர்பாக ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்களை அரசியலமைப்பில் சேர்த்த போதிலும் ''தரை மார்க்கமாக'' என்ற சொற்களைப் போட்டு பெரிய மோசடியைச் செய்திருக்கிறார்கள். இதனால் தரைப் போக்குவரத்து மாகாண சபையின் அதிகார வரம்புக்குள் வரவில்லை. பஸ் போக்குவரத்து எமது கைகளில் தரப்படவில்லை. வடக்கு - கிழக்கு பிராந்திய போக்குவரத்துச் சபைகளை ஒன்றிணைத்து செயற்படச் செய்ய மாகாண அரசு முயன்றபோது சட்டமா அதிபர் தடுத்து விட்டார். மத்திய போக்குவரத்து அமைச்சோ ''நிர்வாக விடங்களில் உங்கள் ஆலோசனைகள் கருத்திற் கொள்ளப்படும். நியமனம், இடமாற்றங்களிற்கும் உங்களின் சிபாரிசுகள் ஏற்கப்படும்'' என்று தெரிவித்திருக்கிறது. சட்டப்படி போக்குவரத்து உங்கள் கைகளில் இல்லை என்றே மத்திய அரசு கையை விரித்துள்ளது.

எனவே பாராளுமன்றத்திற்கென ஒதுக்கிய நிரலில் உள்ள தேசியப் போக்குவரத்து எனும் (இ) பிரிவில் உள்ள ''புகையிரத தரை, கடல், வான் மார்க்கமாக'' என்ற ஏற்பாட்டில் உள்ள, ''தரை மார்க்கமாக'' என்பது நீக்கப்பட்டு தரைப் போக்குவரத்து எமது கைகளில் ஒப்படைக்கபட வேண்டுமென்று இந்தச் சபை கோரவேண்டும். அத்தோடு தேசிய போக்குவரத்து '(ஆ). பிரிவில் உள்ள ''தேசிய பெருந்தெருக்களான பாராளுமன்றத்தினால்'' என்ற ஏற்பாட்டில் தேசிய பெருந்தெருக்கள் என்பது இந்தியாவில்

உள்ளது போல பொருள் கோடல் செய்யத்தக்க வகையிலும் பாராளு மன்றச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று இந்தச் சபை கோர வேண்டும்.

இந்தியாவில் கப்பற் போக்குவரத்து செய்வதற்கும் சுமாரான அதிகாரம் மாநில அரசாங்கங்களுக்கிருக்கிறது. உதாரணமாகப் பம்பாயிலிருந்து சென்னைக்குக் கப்பற்போக்குவரத்தினை மாநில அரசு மேற்கொள்ள முடியும். ஆனல் இங்கு காங்கேசன்துறையிலிருந்து திருமலைக்கு ஆட்களையோ, பொருட்களையோ கொண்டுவரக் கூடிய அதிகாரம் எமக்கில்லை. திருமலையிலிருந்து மூதூருக்குப் படகுச் சேவையினைக் கூட நாம் நடாத்த முடியாதென்று கூறப்படுகிறது.

இன்றுள்ள நிலைமைகளால் தெருப்போக்குவரத்தில் பாதுகாப்பற்ற நிலைகள் ஏற்படும் போது பொருட்களையும் பயணிகளையும் கொண்டுவருதற்கு நீர்ப் போக்குவரத்து அவசியமானது.

எனவே மாகாண எல்லைக்குட்பட்ட நீர்ப் பிராந்தியங்களில் போக்குவரத்துச் செய்யும் அதிகாரம் மாகாண அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்றும் இந்தச்சபை கோர வேண்டும்.

'மோட்டார் வாகன உரிமக் கட்டணம்' என்பதிலும் ஒரு சொல்லைப் போட்டுச் சிக்கலாக்கி இருக்கிருர்கள். இதனல் மோட்டார் வாகனக் கட்டணத்தை அறவிடுவதில் சில சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. மாகாண சபை நிரலில் 36.4 வது பிரிவு 'பாராளுமன்றத்தினல் ஆக்கப்பட்ட சட்டத்தினல் விதித்துரைக்கப்படக் கூடியவாருன அத்தகைய எல்லைகளினுள்ளும் அத்தகைய விலக்களிப்புகளுக்கமையவும்' மோட்டார் வாகன உரிமைக் கட்டணங்களை அறவிடும் உரிமையை மாகாண அரசாங்கத்திற்கு வழங்குகிறது. ஆனல் இதுவரை மோட்டார் வாகன உரிமக் கட்டணத்தை எவ்வாறு மாகாண அரசு அறவிடுவது என்பது பற்றிய ஏற்பாடுகளைக் கொண்ட சட்டத்தைப் பாராளுமன்றம் இயற்றவில்லை. எனவே 'உரிய சட்ட மூலத்தை இயற்றி மோட்டார் வாகன உரிமக் கட்டணத்தை நாம் அறவிடக்கூடிய ஏற்பாடுகளை செய்யுமாறு' மத்திய அரசாங்கத்தை இந்த சபை கோரவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஓடுகின்ற மோட்டார் வாசனங்களைப் பதிவு செய்யும் உரிமை மாகாண அரசாங்கத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்றும் இந்தச்சபை கோர வேண்டும். இந்த மாகாணத்தில் நிரந்தரமாக ஓடுகின்ற வாகனங்கள் யாவும் மாகாண அரசின் கீழ்

பதிவு செய்யப்பட வேண்டும். வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் போது கொழும்பிலும் ஓடுகின்றபோது உரிய மாகாணங்களிலும் பதிவு செய்யப்பட வேண்டும்.

## துறைமுகங்களும் இறங்கு துறைகளும்

13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பாரிய துறைமுகங்களெனப் பாராளுமன்றத்தில் பிரகடனம் செய்யப்பட்ட துறைமுகங்கள் தவிர்ந்த ஏனையவை மாகாண அரசாங்கத்திற்குரியவையாகும். இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தினால் கொழும்பு, திருகோணமலை ஆகிய இரு துறைமுகங்களுமே பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. எனவே வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் திருகோணமலை தவிர்ந்த ஏனைய துறைமுகங்களும், இறங்குதுறைகளும் மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். அது இன்னமும் நடைபெறவில்லை. சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அந்த விடயத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தும் படியும் இந்தச்சபை கோர வேண்டும்.

## கல்வித்துறை

கல்வித்துறையில் குறிப்பிடத்தக்களவு அதிகாரப்பரவலாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் அடிப்படையான விடயங்கள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. ஏ. பி. சி தர பாடசாலைகளில் அதிபர்கள் நியமனம் என்பது இன்னும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. இடமாற்றம். ஒழுங்குக் கட்டுப்பாடுகள், ஆசிரியர்கள் அனைவரும் மாகாண அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

எனவே பாடசாலை அதிபர்கள், ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் ஆகியோரின் நியமனத்தையும் மாகாண அரசாங்கம் மேற்கொள்ளக் கூடியதாக அதிகாரப்பரவலாக்கல் இடம் பெறவேண்டுமென்று இந்தச் சபை கோர வேண்டும்.

அத்தோடு பரீட்சைகளை மத்திய அரசாங்க பரீட்சைத் திணைக்களத்தின் அனுமதியுடனேயே நாம் மேற்கொள்ள முடியும். இதை நீக்கி மாகாண அரசாங்கம் சுயமாகத் தீர்மானித்துப் பரீட்சைகளை நடாத்தக் கூடிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மேலும் பாடநூல்களை உரு

வாக்கும் விடயத்தை தீர்மானிக்கும் அதிகாரம் மாகாண அரசாங்கத்திற்கு வழங்கப்படுவதுடன் பாடப் புத்தகங்களை தீர்மானிக்கும் விடயமும் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் அனைத்தும் மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்கப் படவேண்டும். பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரை இந்தியாவில் தேசிய முக்கியத்துவமான பல்கலைக்கழகங்கள் தவிர ஏனையவை மாநில அரசிக்குரியவை. இலங்கையிலும் பாராளுமன்றம் தேசிய முக்கியத்துவமான பல்கலைக்கழகங்கள் எவை எனத் தீர்மானிப்பதுடன் வடக்கு - கிழகு மாகாணத்திலுள்ள பல்கலைக்கழகங்களை மாகாண அரசிடம் ஒப்படைக்க வேண்டும். கல்வித்துறை சார்ந்த விடயங்களில் தமிழ்பேசும் மக்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்த வரலாறே இந்த நாட்டில் இருக்கிறது. அத்துறை சார்ந்த அதிகாரங்கள் எம்மிடம் வழங்கப்பட வேண்டும். தங்கியிருக்கும் நிலைமையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. எனவே யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக் கழகம் ஆகியன எமமிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் பிரேரிக்கிறேன்.

## வேலை வாய்ப்பு

மாகாண அரசாங்கத்திற்குரிய வேலை வாய்ப்புகளை மாகாண அரசாங்கமே செய்ய வேண்டும். ஆனால் வேலைவாய்ப்பு என்ற விடயத்தைக் கொண்டு போய் ஒருங்கியை நிரலில் போட்டிருக்கிறார்கள். ஒருங்கியை நிரலில் 21வது அம்சமாக இருக்கும் வேலைவாய்ப்பு என்பது மாகாண மட்டத்தில் வேலைவாய்ப்பைத் திட்டமிடல் விசேட வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம், இளைஞர் வேலைவாய்ப்புச் செயற்பாடுகளை மேம்படுத்தல், தொழில் நுட்ப ஆள்வலு நிகழ்ச்சித் திட்டம் என்பன இடம்பெற்றிருக்கின்றன. மாகாண அரசாங்கம் தொடர்பான மேற்படி விடயங்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு உரியது அல்ல. மாகாண அரசாங்கத்தின் வசமே இருக்கவேண்டும்.

ஒருங்கியை நிரலில் உள்ள 21வது பிரிவு அனைத்தும் மாகாண நிரலிற்கு மாற்றப்பட வேண்டும்.

அது மட்டுமன்றி உள்ளூராட்சி, உள்ளூர் நிர்வாகம் இவைகளிலெல்லாம் மத்திய அரசாங்கம் இன்றும் ஊழியர்களை நியமித்து வரு

கிறது. அண்மையில் 11எழுதுவினைஞர்களைத் திருகோணமலைக்கு கொழும்பில் தெரிவு செய்து அனுப்பியிருக்கின்றார்கள். இது சமாதான நிலைமைகளை மேலும் குழப்புமே தவிர நல்ல நோக்கம் கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் இந்த மாகாணத்திற்குட்பட்ட எந்த வேலை வாய்ப்பிலும் மத்திய அரசாங்கம் தலையிடக் கூடாது என்று இந்தச் சபை கோர வேண்டும்.

## சுகாதாரம்

சுகாதாரம் பற்றிய விடயம் சட்டத்திலே மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது மாகாணசபை நிரலில் 11வது பிரிவில் (போதனா வைத்தியசாலைகள், விசேட நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட மருத்துவ மனைகள் தவிர) பொதுமருத்துவமனைகள், கிராமிய மருத்துவ மனைகள், மகப்பேற்று மருத்துவ மனைகளை நிறுவுதலும், பராமரித்தலும்; பொது சுகாதார சேவைகள், சுகாதாரக் கல்வி, போசணை, சிறுவர் பராமரிப்பு, உணவும், உடனலமும், சுற்றுடல், சுகாதாரம்; மாகாணத்திற்கான சுகாதார அபிவிருத்தித் திட்டத்தையும் ஆண்டுச் சுகாதார திட்டத்தையும் அமைத்துச் செயற்படுத்தல்; மருந்துவகைகளை பெற்றுக் கொடுத்தல் தவிர மேலே குறித்த வகையான வைத்தியசாலைகளுக்கு ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இத்துறையிலும் குறிப்பிடத்தக்களவு அதிகாரப் பரவலாக்கல் நடைபெற்றிருந்தாலும் சில சிக்கல்களும் உள்ளன. வைத்தியசாலைகளுக்கு, மருத்துவ உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல், இடமாற்றம் செய்தல் ஆகிய விவகாரங்களை மத்திய அரசு தனது கைகளிலேயே வைத்திருக்கிறது. வடக்கு - கிழக்கில் உள்ள இரண்டு வைத்தியசாலைகளைத் தவிர ஏனையவை எம்மிடம் தரப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையை மாகாண அரசிடம் ஒப்படைக்கும் படி இந்தச்சபை கோர வேண்டும். ஏனெனில் மாகாண மட்டத்திலான வேலை வாய்ப்புக்களையும் மருத்துவ உத்தியோகத்தர்களையும் உருவாக்க எமக்கு இவ்வைத்தியசாலை தேவை.

## உணவுத்துறை உணவு விநியோகம்

உணவுத்துறை, உணவு விநியோகம் ஆகியன மாகாகண அரசிற்கு உரியதென்று சட்டம் கோடிட்டுக் காட்டிய போதிலும் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளோ, உத்தியோகத்தர்களோ மாகாண அரசாங்கத்

திடம் வழங்கப்படவில்லை. மத்திய அரசு விரும்பினால் சில உணவுக் களஞ்சியங்களையும், சில உத்தியோகத்தர்களையும் வைத்திருக்கவாம். முன்னைய பாராளுமன்ற அமைச்சர் காங்கேசன்துறை, அம்பாறை, திருகோணமலை (கிளப்பன் பேர்க்) ஆகிய மூன்று உணவுக் களஞ்சியங்கள் தவிர ஏனையவற்றை எம்மிடம் ஒப்படைப்பதாகக் கூறியிருந்தார். கடந்த பாராளுமன்ற அமைச்சர்கள் எந்தெந்த உணவுக்களஞ்சியங்கள் எந்தெந்த மாகாணத்திற்கு உரியது என்று பிரித்து எவ்வகையான ஊழியர்கள் மாகாண அரசின் கீழ் வருவார்கள் என்றெல்லாம் ஒழுங்கு முறையாகத் திட்டமிட்டார்கள். ஆனல் இன்றைய அமைச்சர்களோ அது சபைகளுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் உரியது என்கிறர்கள். எனவே ஒருங்கிணைய நிரலில் உள்ள இத்தகைய விடயங்கள் மாகாண சபை நிரலுக்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும்

வடக்கு - கிழக்கு மகாணத்திலுள்ள அனைத்து உணவுக் களஞ்சியங்களையும் மாகாண அரசிடம் ஒப்படைப்பதுடன் உணவுக்கட்டுப்பாடு தொடர்பான அனைத்து உத்தியோகத்தர்களையும் மாகாண அரசின் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று இச் சபை கோர வேண்டும்.

## சந்தைப்படுத்தல்

சந்தைப்படுத்தல் பற்றிய அதிகாரம் சட்டத்தினல் மாகாண அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட போதிலும் இதுவரை பரவலாக்கப்படவில்லை. முன்னைய பாராளுமன்ற அமைச்சர் முழுமையாகப் பரவலாக்கப்படுமென்று கூறியபோதிலும் இதுவரை பரவலாக்கப்படவில்லை எனவே நெல்சந்தைப்படுத்தும் சபை, சந்தைப்படுத்தும் திணைக்களம், விற்பனை நிலையங்கள், கூட்டுறவு, மொத்த வியாபார நிலையம் ஆகியவற்றின் வாகனங்கள், வளங்கள் அனைத்தும் உடனடியாக மாகாண அரசிடம் ஒப்படைக்கக் கோரி இச்சபை தீர்மானிக்க வேண்டுமென்று நான் முன் மொழிகின்றேன்.

## கைத்தொழிற்துறையும் மின்சாரமும்.

இதுவரை எத்தவொரு கைத்தொழிற்சாலையும் மாகாண அரசாங்கத்தின் வசம் ஒப்படைக்கப்படவில்லை. பதின்மூன்ருவது திருத்தச் சட்டத்தின் ஒதுக்கிய நிரலில்'' எக் கைத்தொழில்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாடு பொது மக்களின் நலனுக்கு உசிதமானதெனச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினல் வெளிப்படுத்

தப்பட்டதோ'' அக் கைத்தொழில்கள் மத்திய அரசின் வசம் இருக்கும். இதன் பிரகாரம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்கள் தவிர ஏனையவை மாகாண அரசின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.

ஆனல் இதுவரை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில் களை அடையாளங்காணக்கூடியதான பாராளுமன்றச் சட்டம் இயற்றப் படவில்லை. இதனல் மாகாண அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் எந்த வொரு கைத்தொழில் சாலைகளும் ஒப்படைக்கப்படவில்லை.

1949ம் ஆண்டு பத்து இலட்சம் மலையகத்தொழிலாளர்களது வாக்குரிமையைப் பறித்துவிட்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்களைக் கட்டுவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்ட வாழைச்சேனை கடதாசித் தொழிற் சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலை என்பனவும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட கல்லோயா கந்தளாய் சீனித் தொழிற்சாலையும் எமது பிரதேசங்களில் உள்ள ஏனைய தொழிற்சாலை களும் மாகாண அரசாங்கத்திடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டு மென்று இந்தச் சபை கோர வேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை மாகாணசபை நிரலில் 34வது பிரிவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ''(நீர்மின் சக்தியும் தேசிய மின்னிணைப்புக்கு மின் வழங்குவதற்கு தோற்றுவிக்கப்படும் சக்தியும் அல்லாத) மின்வலுவைத் தோற்றுவிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மாகாணத்திலுள்ள அவ்விடங்களையும் வசதிகளையும் அபிவிருத்தி செய் தலும், பேணிக்காத்தலும், முகாமை செய்தலும்'' மாகாணசபை மேற் கொள்ளக் கூடிய பணிகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அதே வேளை ஒருங்கியை நிரலில் 32வதாக ''மாகாணத்தினுள் மின்னிணைப்பு வழங்கலை விசாரித்தலும், மாகாணத்தினுள் மின்சக்தி பயன்படுத்தப்படுவதனை மேம்படுத்தலும், ஒழுங்கு படுத்தலும்'' என்ற விடயம் தொடர்பாக மாகாண, மத்திய அரசாங்கங்கள் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்'' என்கிறது.

மின்சாரத்துறையில் நீர்மின் சக்தி தேசிய மின்னிணைப்பிற்காகத் தோற்றுவிக்கப்படும் சக்தி தவிர மாகாணத்தில் மின் உற்பத்தி நிலை யங்களைத் தோற்றுவிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தாராள மனப்பான்மை சட்டத்தில் காட்டப்பட்டிருப்பினும் நடைமுறையில் ஒன் றுமே செய்ய முடியாது.

நீர்மின்சக்தி பரந்தளவில் நாடு முழுவதும் வழங்கப்படுகிறது. இந்த நிலையில் நாம் ஒரு அனல் மின்நிலயத்தை அமைத்தால் போட்டிநிலை ஏற்படும். பொருளாதார ரீதியில் அனல்மின் உற்பத்தியை விட நீர்மின் உற்பத்தி சிக்கனமானது. இதனல் நீர்மின் உற்பத்திக்கே நடைமுறையில் வரவேற்பிருக்கும்.

எனவே எமக்கு வழங்கப்படும் நீர்மின் வலுவிற்கான உற்பத்திச் செலவையோ அல்லது சலுகைக் கட்டணத்தையோ மத்திய அரசு அறவிடட்டும். ஆனல் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மின்சார நிர்வாகம், மின்சார அபிவிருத்தி தொடர்பான அதிகாரங்களை எமக்கு வழங்க வேண்டுமென்று இந்தச் சபை கோர வேண்டும்.

## புனர்வாழ்வு

புனர்வாழ்வு, புனரமைப்பு சம்பந்தமாக மத்திய அரசாங்கத்துடன் நாம் விரிவான பேச்சுவார்த்தைகளை நடாத்திய போது என்னென்ன விடயங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றதோ அதற்குரிய நிதியை ஒதுக்கித் தருவோம். மாகாண அரசு பயன்படுத்தலாம் என்று ஒத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த வரவு, செலவு திட்டத்திலே 4,400 மில்லியன் ரூபா புனரமைப்புக்கு என ஒதுக்கப்பட்டது. ஆனல் 1350 மில்லியன் ரூபாய்களே மாகாணங்களுக்கிடையே பகிரப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு 1300 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது. எஞ்சிய 3050 மில்லியன் ரூபாய்களை மத்திய அரசு எவ்வாறு? எங்கு? செலவிடப் போகிறது என்பது பற்றி எவ்விதமான அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

எஞ்சிய 3050 மில்லியன் ரூபாய்களும் திசை திருப்பி வேறு மாகாணங்களில் பாவிக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக உறுதியான தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. அதுமட்டுமின்றி எமக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் 1300மில்லியன் ரூபாயைக் கூட மத்திய மாகாண அரசாங்கங்களில் ஒருமித்த தீர்மானத்தின் பேரிலேயே பயன்படுத்த முடியும்.

மாவட்ட மட்டத்தில் செய்யவேண்டிய புனரமைப்புப் பணிகள் பற்றி மாவட்டப் புனரமைப்புக் குழு தீர்மானித்து மாகாண புனரமைப்பு நெறிப்படுத்தல் குழுவிற்கு சமர்ப்பிக்கவேண்டும். மாகாண புனரமைப்பு நெறிப்படுத்தல் குழுவில் முதலமைச்சர், புனர்வாழ்வு அமைச்சர், நிதியமைச்சர், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண மட்டத்

திலுள்ள மத்திய அரசாங்கத்துறைகளின் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்கள். மாகாண புனரமைப்பு நெறிப்படுத்தல் குழு தீர்மானித்த பின் மத்திய அரசாங்க தேசிய புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பவேண்டும். அவர்கள் எதை எதை அங்கீகரிக்கிறார்களோ அத்திட்டங்களையே நாங்கள் செயற்படுத்த முடியும்.

எனவே இந்த நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும். 'மாகாண புனரமைப்பு நெறிப்படுத்தல் குழு' இறுதியான தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுக்கும் வல்லமையுடையதாக மாற்றப்பட வேண்டும். மத்திய அரசிற்கு நிதி சம்மந்தமான விடயங்களைத் தீர்மானிக்கும் நிலைமை இருப்பதால் மத்திய நிதியமைச்சின் ஒன்றிரண்டு பிரதி நிதிகளும் மாகாண அமைச்சின் ஓரிரு பிரதிநிதிகளும் சேர்ந்து நிதி சம்மந்தமான விடயங்களை மொத்த ரீதியாகத் தீர்மானிக்கலாம். நிதியை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி 'மாகாண புனரமைப்பு நெறிப்படுத்தல் குழு' இறுதி முடிவை எடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இதன் மூலமே புனரமைப்புப் பணிகள் சிக்கல்களில்லாமலும் துரிதமாகவும் நிறைவேற்றப்படுவதுடன் நிதிகளை பயன்படுத்த முடியாமல் தடுக்கப்படுகின்ற நிலைமையையும் தவிர்க்க முடியும்.

## சுற்றுலாத்துறை

சுற்றுலாத்துறை என்கின்ற விடயம் ஒருங்கிணை நிரலில் இடம் பெற்று இருக்கின்றது, இதனால் இந்த விடயம் மத்திய அமைச்சரினால் தீர்மானிக்க வேண்டிய நிலை நடைமுறையில் ஏற்பட்டிருக்கிறது. தற்போது உள்ளூராட்சி அமைப்புகளுக்கு கீழ் இயங்கி வரும் வாடிவீடுகள் மட்டுமே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் கீழ், உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வடக்கு - கிழக்கு பகுதியில் இயங்கிவரும் சுற்றுலா விடுதிகள் ஒப்படைக்கப்படவில்லை. எனவே வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து சுற்றுலா வளங்களும் மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும். என்ற தீர்மானத்தை இங்கு முன்மொழிகிறேன்.

## பகிரங்க சேவை ஆணைக்குழு

பகிரங்க அரசாங்க சேவையாளர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல் பதவி விலக்கல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை செய்தல் ஆகிய அதிகாரங்கள் அடிப்படையில் மத்திய அமைச்சர்களுக்கு இருந்தாலும் அவர்கள் அவ்வதிகாரங்களைப் பகிரங்க சேவை ஆணைக்குழு போன்றவற்றிற்கு மாற்றுகின்றனர்கள்.

மாகாண அடிப்படையில் பகிரங்க சேவை ஆணைக்குழு இருந்த போதிலும் மாகாண அமைச்சரவைக்கு மேற்கூறிய அதிகாரங்களோ, கைமாற்றுகின்ற ஆற்றலோ சட்டத்தினால் வழங்கப்படவில்லை. ஆளுநருக்கே பகிரங்கசேவை ஊழியர்களின் நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவரே இவ்வதிகாரங்களை மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்துகின்றார். அவர் இவ்வதிகாரங்களை மாகாண அமைச்சரவயிடம் கையளிக்கக் கூடியதாக சட்ட ஏற்பாடுகள் இல்லை.

மாகாண அமைச்சுகளில் செயலாளர்களாக பணிபுரிபவர்கள் முன்பு மத்திய அரசாங்க அதிகாரிகளாக இருந்த போது தமக்கு கீழ் உள்ள சில உத்தியோகத்தர்களை நியமிக்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பியோன்களை நியமிப்பதற்கு கூட ஆளுனரிடம் போக வேண்டிய நிலை. ஒரு வகையில் இந்த மாகாண அரசாங்கத்தில் கடமை புரியவந்த அதிகாரிகள் தரம் குறைக்கப்படுகின்றார்கள்.

இந்திய அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசின் ''பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதியும் மாநில அரசின்'' பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஆளுனரும் அதிகாரங்களை கையளிப்பார்கள். ஆனால் இலங்கை அரசியல் அமைப்பானது மத்திய அரசின் ''பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு மத்திய அமைச்சரவை அதிகாரங்களைக் கையளிக்கும் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கிறது. ''மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குரிய அதிகாரங்களை இந்திய அரசியளமைப்பை அடியொற்றியதாக ஆளுனர் அதிகாரங்களை கையளிப்பதற்கான ஏற்பாடுகளை 13 வது திருத்தச்சட்டம் கொண்டிருக்கிறது. இருப்பினும் இந்தியாவில் மத்திய மாநில மட்டங்களில் இயங்கி வரும் பகிரங்ச் சேவை ஆணைக்குழுக்கள் நியமனம், இடமாற்றம். ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்றவற்றை செய்வதில்லை. வெறுமனே யாரிடமிருந்தாவது வரும் மேன்முறையீட்டுக்களை விசாரிக்கின்ற கௌரவ மன்றமாகவே இருந்து வருகின்றது. இதனால் அதிகாரங்களை அதற்கு யார் கையளிப்பதென்பதானது ஒரு பிரச்சனைக்குரிய அம்சமாக அங்கு இல்லை.

எனவே இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்கள் கௌரவ நியமனங்களாகச் செயற்பட்ட போதிலும் நடைமுறை அவர்களை முழுமையான நிறைவேற்று உத்தியோகத்தர்களாக மாற்றுகின்றது. எனவே மத்திய அரசின் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குரிய அதிகாரங்களை மத்திய அமைச்சரவை வழங்குவது போல மாகாண மட்டத்திலும் மாகாண அமைச்சரவை மாகாணத்

திற்குரிய பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரங்களைக் கையளிப்ப தற்கான சட்டத்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். சாதாரண சட்டத்திலே இது இருப்பதனால் திருத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையில்லை.

## மாகாண மேல் நீதிமன்றம்

13வது திருச்சட்டத்தின் 154 (ஞ) உறுப்புரையின் படி வடக்கு - கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும். இன்றுவரை மாகாண மேல் நீதிமன்றம் அமைக்கக் கூடிய எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே உடனடியாகத் திருகோணமலையில் வடக்கு - கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டுமென்று இந்தச் சபை கோர வேண்டும்.

## சிறைச்சாலை மற்றும் பராமரிப்பு நிலையங்கள்

சட்டத்தின்படி மாகாண சபை நிரலில் சீர்திருத்தும் நிலையங்களும் சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களும் இவையோடு ஒத்த வேறு நிறுவனங்களும் மாகாண அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்டதாக மாகாண சபை நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் சிறைச்சாலை என்றொரு சொல் சட்டத்தில் இடம்பெறவில்லை. ஆனால் இன்று வரைக்கும் எந்தச் சிறைச்சாலையோ, சிறுவர் நன்னடத்தை நிலையங்களோ கையளிக்கப்படவில்லை. உடனடியாக இவை மாகாண அரசாங்கத்திடம் கையளிக்கப்பட வேண்டும்.

## தேர்தல்கள்

இந்திய அரசியலமைப்பின் படி ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாநில அரசுத் தேர்தல் பற்றிய சட்டங்களை மத்திய பாராளுமன்றம் இயற்றினாலும் மாநில அரசுகளே தேர்தல்களை நடாத்துகின்றன. அதே போல இங்கும் மாகாண அரசுக்குரிய தேர்தல் சட்டத்தை மத்திய பாராளுமன்றம் நிறைவேற்றட்டும். ஆனால் தேர்தலை நடாத்தும் ஆதிகாரத்தை மாகாண அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும். அத்தோடு 13வது திருத்தச்சட்டப்படி உள்ளூராட்சி அமைப்பு முழுக்க முழுக்க மாகாண அரசின் வசம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் அதனுடைய தேர்தல்கள், வட்டார எல்லைகள் போன்றவற்றினை நிர்ணயிக்கும் அதிகாரம் எமக்கு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

## தொலைத் தொடர்பு

எந்த ஒரு நாட்டிலும் தொலைபேசி, கம்பி இல்லாத்தந்தி ஆகியவை மத்திய அரசாங்கத்திடமே இருக்கின்றது. ஆனால் மாகாண மட்டத்தில் சில அடிப்படையான விடயங்களை தீர்மானிக்கும் அதிகாரம் மாகாண அரசாங்கத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். இங்கே நடைமுறையில் என்ன நடக்கின்றதென்றால் யாருக்கு தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதை இராணுவ அதிகாரிகளே தீர்மானிக்கும் நிலைமை உள்ளது. அவசரமாக, அவசியமாக தொலைபேசி யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் எமக்கு வழங்கப்பட வேண்டும்.

## ஒருங்கியை நிரல்

13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திலே 'ஒருங்கியை நிரல்' என்று ஒரு விடயம் இருக்கிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தையும், 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தையும் பார்த்தால் வடிவத்தில் ஒரே மாதிரியாக இருக்கின்றது. இந்திய அரசியல் அமைப்பில் நிரல் ஒன்றில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களும் நிரல் இரண்டில் மாநில ஆட்சியின் அதிகாரங்களும், நிரல் மூன்றில் மத்திய மாநில அரசாங்கங்களுக்குரிய சட்டம் ஆக்கும் அதிகாரங்களும் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

இலங்கையில் மாகாண அரசாங்கத்தை உருவாக்கிய சட்டமான ''பதின்மூன்றாவது திருத்தச் சட்டம்'' மூன்று நிரல்களைக் கொண்டிருக்கிறது. முதலாவது நிரல் மாகாண சபைக்கான அதிகாரங்களையும் இரண்டாவது நிரலான 'ஒதுக்கிய நிரல்' மத்திய அரசாங்கத்துக்குரிய அதிகாரங்களையும் மூன்றாவது நிரலான 'ஒருங்கியை நிரல்' மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் கொண்டிருக்கக் கூடியதான அதிகாரங்களையும் கொண்டிருக்கின்றது.

ஒருங்கியை நிரலைப் பொருள் கோடல் செய்வதிலும் யார் பொருள்கோடல் செய்வது? என்பதிலும் பல நடைமுறைப் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் கொண்டிருக்கக் கூடியதான விடயங்களைக் குறிப்பிடும் 'ஒருங்கியை நிரல்' மூலம் ஒரு கையால் அதிகாரங்களைக் கொடுத்து, மறு கையால் அதிகாரங்களைப் பறித்தெடுக்கும் நிலையே காணப்படுகிறது. உதாரணமாகக் கடற்றொழிலைப் பொறுத்தவரை மாகாண சபைக்கான நிரலில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மத்திய அரசாங்கத்திற்

குரிய அதிகாரங்களைக் கொண்ட 'ஒதுக்கிய நிரலில்' ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கப்பால் மீன்பிடித்தலும், மீன்பிடித்தொழிலும மத்திய அரசின் அதிகாரங்களாகக் கொண்டிருக்கிறது.

இதன்படி ஆள்புல நீர்ப்பரப்புகளுக்குட்பட்ட மீன்பிடி மாகாண அரசாங்கத்தின் கீழ் வரவேண்டும். ஆனல் ஒருங்கியை நிரலில் (மத்திய மாகாண அரசாங்களுக்குரிய அதிகாரங்களைக் கொண்ட) 'கடற்றொழில் ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கப்பால் மீன்பிடித்தல் அல்லாதது' என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனுல் ஆள்புல நீர்ப்பரப்புக்குட்பட்ட கடற்றொழிலிலும், மத்திய அரசின் கையோங்கவே செய்யும்

இவ்வாறு சர்ச்சைக்குரியதான இந்த ''ஒருங்கியை நிரல்'' பற்றிய விளக்கங்களைக் கடைசியாக ஜனதிபதி அவர்களைச் சந்தித்த போது நான் வினவினேன். ஒருங்கியை நிரலின் விளக்கம் என்ன? இதனை யார் பொருள் கோடல் செய்வது? என்றெல்லாம் கேட்ட போதிலும் இதுவரை பதில் இல்லை. நடைமுறையில் ''மத்திய அரசாங்க அமைச்சர்கள் ஒருங்கியை நிரலில் உள்ள முப்பத்தி ஆறு விடயங்களில் எதைப் பரவலாக்க விரும்புகிறர்களோ அதைப் பரவலாக்குதல்'' என்ற அர்த்தம் கொடுக்கப்படுகிறது.

மேலும் ''ஒருங்கியை நிரல்'' தொடர்பான பொருள் கோடலில் இன்னும் ஒரு பிரச்சினையும் ஏற்படுகின்றது. பல்வேறு அமைச்சுக்களினுடைய குறிப்பாக சபைகள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றினுடைய அதிகாரிகளால் இது ஏற்படுகின்றது. பாராளுமன்றத்தில் சாதாரண சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் என்பன நீண்ட காலமாக இயங்கி வருகின்றன.

ஆனல் 13வது திருத்தச்சட்டத்தின் பின்னர் சபைகள், கூட்டுத்தாபனங்களில் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குரிய விடயங்கள் பரவலாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக நெல் கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவது மாகாண அரசிற்குரிய வேலை. ஆனல் இதுவரை நெல் சந்தைப்படுத்தும் சபையே இதனைச் செய்து வந்தது. குறிப்பிட்ட மத்திய அமைச்சர் கூறுகின்றர். ''அந்தச் சபையின் சொத்துக்களோ, வாகனங்களோ, ஆளணியினரோ, நிதிவசதிகளோ பரவலாக்கம் செய்யப்பட மாட்டாது.'' ஏனெனில் அது பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது என்று.

இதன் விளைவாகப் பெரும்பாலான விவகாரங்கள், இயக்குதல்கள் பரவலாக்கம் செய்யப்பட முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஆகவே இந்த மாகாண அரசாங்கம் வலுவாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அந்தந்த மாகாணங்களில் உள்ள தேசிய ரீதியான விடயங்களைத் தவிர ஏனையவை அனைத்தும் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும். பாராளுமன்றச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட சபைகள், கூட்டுத்தாபனங்களின் விடயங்களைப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் மாகாண அரசிற்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று இந்தச் சபை தீர்மானிக்க வேண்டும். அத்தோடு ஒருங்கியை நிரலும் திருத்தப்பட வேண்டும் என்றும் இச்சபை பிரேரிக்க வேண்டும்.

புனித செபஸ்தியார் அச்சகம், மட்டக்களப்பு.

ARCHIVES